நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகம்
53331
SEP 2007
சென்னை-600 005

R2

### கருக்கம்

கடைகள் – உள்ளாட்சி அமைப்புகள் – நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் பேருந்து நிலையங்களில் தமிழ்நூல்கள் விற்பனைக்கு இரண்டு பெட்டிக் கடைகள் ஒதுக்கீடு செய்வது – ஆணை வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை

அரசாணை (2டி) எண்.120 | நாள் 10/07/2007

படிக்க

நகராட்சி நிர்வாக ஆணையரின் கடிதம் ந.க.எண்.24088/2007/ஆர்2, நாள் 28.6.2007.

---

**ஆணை:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சட்டப் பேரவையில் 12.4.07 அன்று மான்யக் கோரிக்கை 34–ன் அறிவிப்பு எண்.11–ல் கீழ்க்கண்டவாறு அறிவித்தார்கள்:-

"11. பேருந்து நிலையங்களில் தமிழ் நூல்கள் விற்பது பொது மக்களுக்கு நூல் படிக்கும் பழக்கத்தை அதிகரிக்கவும், தமிழ் நூல்களின் விற்பனையை அதிகரிக்கவும் ஏதுவாக அமையும். இதைக் கருத்தில் கொண்டு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள அனைத்துப் பேருந்து நிலையங்களிலும் இரண்டு பெட்டி கடைகள் (Kiosks) அமைக்கப்பட்டு, இக்கடைகளில் தமிழ் நூல்கள் மட்டுமே விற்பனை செய்யப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் முதலில் வருபவர்களுக்கு முன்னுரிமை என்ற முறையில் குறைந்த வாடகையில் வழங்கப்படும்"

2. மேற்படி அறிவிப்பு குறித்து நகராட்சி நிர்வாக ஆணையரிடமிருந்து வரப்பெற்ற அறிக்கையின் அடிப்படையில் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் பேருந்து நிலையங்களில் தமிழ் நூல்கள் விற்பனைக்கு இரு பெட்டிக்கடைகள் ஒதுக்கீடு செய்ய உள்ளாட்சி அமைப்புகளுக்கு கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன் அனுமதி அளிக்கலாம் என அரசு கருதி அவ்வாறே ஆணையிடுகிறது :-

i) நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் பேருந்து நிலையங்களில் தமிழ் நூல் விற்பனைக்கு இரு பெட்டிக் கடைகள் ஒதுக்கீடு செய்யலாம்.

ii) அவ்வாறு ஒதுக்கீடு செய்யப்படும் பெட்டி கடைகளுக்கு மாத வாடகையாக ரூ.200/- அல்லது அப்பகுதியின் நிலவும் உயர்ந்த குத்தகை தொகையில் நான்கில் ஒரு பங்கு இவற்றில் எது குறைவோ அதனை பொது ஏலம் தவிர்த்து நிர்ணயம் செய்யலாம்.

iii) முதலில் வருபவர்களுக்கு முன்னுரிமை எனினும், அங்கீகரிக்கப்பட்ட புத்தக விற்பனையாளர்கள்/ நூல் வெளியீட்டாளர்கள் / விநியோகஸ்தர்கள் ஆகியோர்களுக்கு தனிநபர்களை விட முன்னுரிமை தரலாம்.

iv) இவ்வாறு பொது ஏலம் தவிர்த்து தமிழ் நூல்கள் விற்பனைக்கு என தரப்படும் பெட்டிக் கடைகளில் தமிழ் நூல்கள் தவிர வேறு ஏதும் விற்பனை செய்யக் கூடாது என்று குத்தகையில் நிபந்தனை விதிக்கப்பட வேண்டும்.

v) நிபந்தனைகள் மீறப்படும் நிகழ்வில் குத்தகை ரத்து செய்யப்படலாம்.

vi) பெட்டிக்கடையை உரிமம் பெற்றவரே தன்னுடைய செலவில் கடையை நிர்மானித்துக் கொள்ள வேண்டும் என்றும் நிபந்தனை விதிக்கலாம்.

(ஆளுநரின் ஆணைப்படி)

கே. தீனபந்து
அரசுச் செயலாளர்

பெறுநர்
நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை-5.
நகல்
மாண்புமிகு ஊரக வளர்ச்சி (ம) உள்ளாட்சி துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அந2/வ.செ) துறை,
இ.கோ/உ.நகல்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்